# DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.376/2019**

**PW-1**

**Date :-28.07.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. ராஜலெட்சுமி | Caste | |
| க/பெ. | சிங்காரவேலன் | Calling | வீட்டுக்குடித்தனம் |
| Village | ஸ்ரீரங்கம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 50/2026 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

**நான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வந்து வீட்டுக்குடிதனம் நடத்தி வருகிறேன். கடந்த 12.03.2012 ம் தேதி அன்று திருவானைக்கோவில் AK திருமணமண்டபத்திற்கு திருமணத்திற்கு சென்றுவிட்டு நானும் எனது அம்மா விசாலாட்சியும் எனது இரண்டு வயது குழந்தை ஸ்ரீநிஷா என்பவரும் சென்றிருந்தோம். அப்போது எனது இரண்டு வயது குழந்தை கீழே விளையாடி கொண்டிருந்தது . அப்போது ஆஜர் எதிரி என் குழந்தையின் கழுத்தில் அணிந்திருந்த 5 கிராம் எடையுள்ள தங்க செயினின் கொக்கியை கழற்றிக்கொண்டு இருந்தார் . அதை நான் உடனடியாக பார்த்துவிட்டு சத்தம்போட்டு அருகில் இருந்தவர்கள் உதவிடன் ஆஜர் எதிரியை பிடித்து அவர் எனது குழந்தை கழுத்தில் இருந்து கழற்றிய செயினையும் போலீசில் ஒப்படைத்து புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் . அந்த புகார் மனு அ .சா.ஆ.1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. எனது குழந்தையின் கழுத்தில்இருந்து எதிரி**

கழற்றிய 5 கிராம் எடையுள்ள தங்க செயினை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். அந்த செயினை எனது குடும்ப சூழ்நிலை காரணமாக விற்றுவிட்டதால் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய இயலவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரியின் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை ஆகையால் வழக்கறிஞர் தியாகராஜன் ( MS.No.3552/2019 ) அவர்கள் நீதிமன்றதால் amicus curie) ஆக நியமிக்கப்பட எதிரியிடம் வினவியபோது எதிரி விருப்பம் உண்டு என்று கூறியதால் நியமிக்கப்பட்டார் . அ.சா. 1 குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

முதல் விசாரணையில் கூறிய விவரத்தை காவல்துறை விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான் . புகாரிலும் குறிப்பிட்டுள்ளேன். செயின் மாடல் பற்றி புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . எனது நகை என்பதற்கான இரசீதை போலீஸ் விசாரரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். டிரங்க் ரோடு தென்வடல் ரோட்டில் எந்த திசையில் நின்றேன் என்று எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான் . நான் யார் திருமணத்திற்கு சென்றேன் என்ற விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரு ஆறு மாதத்தில் கேட்டிருந்தால் எனக்கு ஞாபகம் இருந்திருக்கும் . நான் சொல்வதுபோல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல . நான் எனது புகாரில் கல்யாண மண்டபத்தினுள் சம்பவம் நடந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான் . காவல் நிலையத்திற்கு நான் மட்டும்தான் சென்றேன் என்றால் சரியல்ல நானும் எனது குழந்தையும் சென்றோம் . கல்யாண மண்டபத்தில் 500 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான் . சம்பவம் நடந்திருந்தால் கல்யாண மண்டபத்தில் உள்ள நபர்கள் என்னுடன்

வந்திருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் மட்டும்தான் சென்றேன். எனது குழந்தை செயினை அணிந்திருந்ததற்காக புகைப்பட ஆதாரங்கள் போலீஸ்விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . கூட்ட நெரிசலில் எனது குழந்தை அந்த செயினை தவறவிட்டது என்றால் சரியல்ல. அதை எடுத்துக்கொடுத்தவர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக கல்யாண மண்டபத்தில் பொருட்கள் காணாமல்போகும் என்றால் சரிதான் . அவ்வாறு காணாமல்போன பொருளை எதிரி திருடினார் என்று பொய்யாக புகார் கூறுகிறேன் என்றால் சரியல்ல . பொருள் காணாமல் போனால் எனது கணவர் திட்டுவர் என்ற காரணத்தினால் எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்தள்ளேன் என்றால் சரியல்ல . நானே எதிரியை காவல்நிலையம் அழைத்து சென்றதற்கான எந்தவித சாட்சியம் அழைத்த செல்லவில்லை என்றால் சரிதான் .புகாரை நானே எனது சுயநினைவுடன் எழுதினேன். புகாரில் சொன்னதுபோல் எந்தசம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

Sd/-xxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made is his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
**Srirangam**